| | |
|---|---|
|  | # நீதிபதியான குரங்கு |
|  | முற்காலத்தில் அநேகமான மிருகங்கள் சுதந்திரமாக திரிந்து வாழ்ந்தும், மிகவும் குறைவான மிருகங்களே மனிதர்களுடன் சேர்ந்து வாழ்ந்தும் வந்த நிலையில் ஒரு நாயும் ஒரு பூனையும் அறிஞர் ஒருவரின் வீட்டில் வாழ்ந்து வந்தன.<br><br>ஒரு நாள் அந்த அறிஞருக்கு சுடச்சுட ஒரு கேக் அன்பளிப்பாகக் கிடைத்தது.<br>அவர் ஒரு வேலையாக ஒருசில மணித்தியாலங்கள் வெளியே செல்ல வேண்டியிருந்ததால் உயரத்தில் பூட்டப்பட்டிருந்த ஒரு பலகையின் மேல் பாதுகாப்பாக அந்தக் கேக்கை வைத்தார். |
|  | அந்தப் பூனை அறிஞரை கவனமாக நோட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவர் கதவைத் தாண்டி வெளியே சென்றதும் ஜன்னலுக்கு அருகே இருந்த கூடைக்<br><br>கதிரைக்கு மேல பாய்ந்தது.<br>பின் அங்கிருந்து மேசையை நோக்கிப் பாய்ந்து. அங்கிருந்து மிகவும் சிரமப்பட்டு ஒரே பாய்ச்சலில் அந்தப் பலகையை சென்றடைந்தது.<br>ஒரு ஆணியில் மூங்கில் பின்னலால் சேர்த்துக் கட்டப் பட்டிருந்த அந்தப் பலகையினால் இவ்வேகப் பாய்ச்சலை தாக்குப் பிடிக்க முடியவில்லை.<br>பலகையுடன் கேக்கும் பூனையும் படாரென கீழே விழுந்தன.<br>வெளியே சூரிய வெளிச்சத்தில் பெரியவரின் வருகைக்காக நாய் காத்திருந்தது. |
|  | பெரிய சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்ட நாய் அறைக்குள் ஓடிப் போனது.<br><br>உள்ளே கமகமக்கும் கேக்கை கையில் ஏந்தி வைத்திருக்கும் பூனையைக் கண்டவுடன்> அது இருக்குமிடத்திற்குப் பாய்ந்து> பூனையிடமிருந்த கேக்கை இழுத்துப் பறிக்க நினைத்தது.<br><br>;அந்தப் பூனை சீறியபடி வீட்டுப் பங்காளியின் மூக்கில் பலமாக அடித்தது.<br><br>நாய் ஊளையிட்டது. |



தோட்ட மதிலூடாக தாவி வந்த குரங்கு ஒன்று ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தது.

„இந்த அற்புதமான காலநிலையில் ஏன் இருவரும் சண்டை பிடிக்கிறீர்கள்?“ என்று வேடிக்கையாகக் கேட்டது.

நாய் கோபத்துடன் குரைத்தது. „எதற்கும் பயன்படாத இந்தக் கள்ளப் பூனை எனது எஜமானின் கேக்கை களவெடுத்துவிட்டது!“ என்றது.

„இதனால் உனக்கென்ன?“ ஆத்திரத்துடன் கத்தியது பூனை. “சோம்பேறியான நீ வெய்யிலில் ஓய்வெடுக்கும் போது> நான் எனது முயற்சியால் மிகவும் சிரமப்பட்டு இந்தக் கேக்கை எடுத்தேன்!“

„வெட்கமற்ற சுயநலமிருகமே!“ என்று உறுமியது நாய். „இந்தக் கேக்கை நீ மட்டும் தின்னலாம் என்று நினைத்தாயா? அது எங்கள் எஜமானிக்குச் சொந்தமானது. எனவே எனக்கும் இதில் உரிமை இருக்கிறது.“



„சண்டையை நிறுத்துங்கள்“ என்று குரங்கு கூறியது „.இந்தப் பெரிய கேக் உங்கள் இருவருக்கும் போதாதா? அங்கே மேசைக்கு மேல் ஒரு தராசு இருக்கின்றது. நீங்கள் அபகரித்ததை உங்கள் இருவருக்கும் இரு சம துண்டுகளாக நான் பகிர்ந்து தருகின்றேன்.“

பூனையும் நாயும் அதற்கு உடன்பட்டன.



குரங்கு கேக்கைப் பிரிப்பதை நாயும் பூனையும் ஆர்வத்துடன் பார்த்தன. குரங்கு கேக்கை இரு துண்டுகளாகப் பிரித்து தராசுத் தட்டுகளில் வைத்தது. ஒரு தராசுத்தட்டு கீழே இறங்கியது.

„இந்தத் துண்டு கொஞ்சம் பாரமாக இருக்கிறது.“ தான் நேர்மையாக இருப்பதாகக் காட்டிக் கொண்டு கேக்கில் கொஞ்சத்தைப் பிய்த்து வாயில் போட்டு சுவைத்தது.

நாயும் பூனையும் ஆவலுடன் பார்த்துக் கொண்டு இருந்த போது தராசுத் தட்டு மேலே உயர்ந்தது. „இப்ப சரியாக இருக்கும்!“ என்று கூறியது நாய்.



„இல்லை!“ என்று கடுமையாகக் கூறியது குரங்கு. „இந்தக் கேக்குத் துண்டு கொஞ்சம் பாரமாக இருக்கிறது. நான் ஒரு நியாயமற்ற நீதிபதி என்று ஒருத்தரும் என்னைக் குறை கூறக்கூடாது.“

இவ்வாறு கூறியபடி அந்தக் கேக்கிலிருந்து ஒரு சிறு துண்டைப் பிய்த்து வாய்க்குள் போட்டு அசைத்தது.

ஆனாலும் அது கொஞ்சம் பெரிதாகிவிட்டதால் இப்பொழுது தராசின் மறுதட்டு கீழே இறங்கிவிட்டது.

அந்தக் குரங்கு புரியாத சில வார்த்தைகளை முணுமுணுத்தபடி, இரு தட்டுகளும்; ஏறக்குறைய சமமாக வரும்வரை இரண்டாவது தட்டில் இருந்த கேக்துண்டை தாள் தாளாகப் பிய்த்து அவாவுடன் வாயில் தள்ளியது.

| | |
|---|---|
|  | இறுதித் தருணத்தில் பெரிய துண்டாக இருந்த கேக்கிலிருந்து மீண்டும் அதிகமாக எடுத்தது. அந்தக் கேக் சிறியதாக வந்ததால் அத்தட்டு மேலுயர்ந்தது. அது தனது வேலையை மீண்டும் புதிதாக ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.<br><br>இந்த நடவடிக்கை நீண்டநேரம் மாறிமாறித் தொடர்ந்ததால் ஒரு தராசுத்தட்டு வெறுமையாகியதுடன் அடுத்த தட்டில் ஒரு கேக்துண்டு மீதியாக இருந்தது. |
|  | கோபமடைந்த குரங்கு நாயையும் பூனையையும் திட்டத் தொடங்கியது.<br><br>„போயும் போயும் கேவலம் ஒரு சிறிய விடயத்துக்காக நீங்கள் இருவரும் கலகஞ் செய்ததால், அதைத் தீர்த்து வைக்க என்னை நடுவராக்கினீர்களா? நீங்கள் இருவரும் வெட்கப்பட வேண்டும்! நீங்கள் சமாதானம் ஆக வேண்டும் என்பதற்காக மீதியாக உள்ள இந்தக் கேக் துண்டையும் நானே சாப்பிடுகின்றேன்.“<br><br>மீதித் துண்டையும் வாய்க்குள் போட்ட குரங்கு ஜன்னலுக்கு வெளியே தாவியது. நாயும் பூனையும் அதை ஆச்சரியத்துடன் பார்த்தன. |
|  | „இது உனக்குத் தேவை,“ என்று சீறியது பூனை. „ஏன்? நீயும்தான் இவ்வளவு கஞ்சத்தனமாக இருந்தாய்?“ என்று உறுமிய நாய், தளர்வுடன் வெளிச்சமான தனது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றது.<br><br>„யாரையும் நம்பமுடியவில்லை“, என முணுமுணுத்த நாய் மீண்டும் நித்திரை கொள்ளச் சென்றது. |
|  | முற்றும். |